# வெளிப்படுத்துதல்கள்

நம்மை விட்டுப் பிரிந்த சகோதரியைப் பற்றிய இந்தச் சாட்சிகளுடனும் நன்றியுரைகளுடனும், இந்த வார்த்தைகளையும் நான் விட்டுச்செல்ல விரும்புகிறேன். பெல் என்பவரின் குடும்பத்தினருடன் எனக்கு முதலில் அறிமுகமானவர் அவருடைய கணவர், ஜிம்மி, மரித்துவிட்ட என்னுடைய தகப்பனாருக்கு நெருங்கிய நண்பராய் இருந்தார். அதன்பின்னர் அடுத்த சில ஆண்டுகளில், நான் ஒரு ஊழியக்காரரானேன், மேலும் சகோதரி பெல்லுடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது, அவளை ஒரு உண்மையான பக்தியுள்ள கிறிஸ்தவராக அறிந்து கொண்டேன். எல்லா இடங்களிலும், நாம் அனைவரும் அவள் இல்லாததை உணர்வோம். இதைப் போன்ற ஒருவரின் மேல் வார்த்தைகளைக் கூறுவது மிகவும் எளிதானது, ஏனென்றால் நீங்கள் எந்தக் காரியத்தையும் பின்வாங்க வேண்டியதில்லை. அவள் ஒரு கிறிஸ்தவராக இருக்க வேண்டிய அனைத்தையும் கொண்டிருந்தாள்.

2 ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் அந்தச் சகோதரி பாடுவதை நான் கேட்டபோது, அது எனக்கு அவளுடைய பாடலை மிகவும் நினைவூட்டியது, அவளை இங்குச் சுற்றிலும் நாம் அறிவோம். அவள் பாடுவதை விரும்பினாள். இது செய்யப்பட்டதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், ஏனென்றால் உண்மையாகவே சகோதரி பெல் எப்படி உணர்ந்திருப்பார் என்பதை இது உண்மையாகவே வெளிப்படுத்தியது. அவள் அந்தவிதமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பினாள். என்னுடைய ஜெபமும், உத்தமமான ஜெபமும் என்னவென்றால், அவள் கொண்டிருந்ததைப் போன்ற ஒரு சாட்சியோடு நாம் யாவரும் பாதையின் முடிவில் வர வேண்டும் என்பதேயாகும்.

3 நான் இங்கே வேத வாக்கியங்களிலிருந்து, ஒரு பகுதியை வாசிக்க விரும்புகிறேன். அவள் தேவனுடைய வார்த்தையைப் பெரிதும் நேசிப்பவளாயிருந்தாள் என்பதை நான் உணருகிறேன், அவருடைய வார்த்தை மிகவும் நித்தியமானதாயிருக்கிறது. நான் யோபு 14-ம் அதிகாரத்தின் ஒரு பகுதியை வாசிக்கலாம் என்று எண்ணினேன்.

> *ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்.*
>
> *அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான்.*
>
> *...இப்படிப்பட்டவன்மேல் நீர் உம்முடைய கண்களைத் திறந்துவைத்து, உம்முடைய நியாயத்துக்கு என்னைக் கொண்டுபோவீரோ?*

*அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை.*

*அவனுடைய நாட்கள் இம்மாத்திரம் என்று குறிக்கப்பட்டிருக்கையால், அவனுடைய மாதங்களின் தொகை உம்மிடத்தில் இருக்கிறது; அவன் கடந்துபோகக்கூடாத எல்லையை அவனுக்கு ஏற்படுத்தினீர்.*

*அவன் ஒரு கூலிக்காரனைப்போல் தன் நாளின் வேலையாயிற்று என்று ரம்மியப்படுமட்டும் அவன் ஓய்ந்திருக்கும்படி உமது பார்வையை அவனைவிட்டு விலக்கும்.*

*ஒரு மரத்தைக்குறித்தாவது நம்பிக்கையுண்டு; அது வெட்டிப்போடப்பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும்;*

*அதின் வேர் தரையிலே பழையதாகி, அதின் அடிக்கட்டை மண்ணிலே செத்தாலும்,*

*தண்ணீரின் வாசனையினால் அது துளிர்த்து, இளமரம்போலக் கிளைவிடும்.*

*மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான்,... ஜீவித்துப்போனபின் அவன் எங்கே?*

*தண்ணீர் ஏரியிலிருந்து வடிந்து, வெள்ளம் வற்றிச் சுவறிப்போகிறதுபோல,*

*மனுஷன் படுத்துக்கிடக்கிறான், வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை.*

*நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபத்தின்* நாட்கள் *தீருமட்டும் என்னை மறைத்து,...எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்.*

*மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்.* நான்...

*என்னைக் கூப்பிடும்,...நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக.*

*இப்பொழுது என் நடைகளை எண்ணுகிறீர்;* நீர் *என் பாவத்தின்மேலல்லவோ கவனமாயிருக்கிறீர்.*

4 நித்திய வார்த்தையிலிருந்து வாசிக்கையில், நாம் ஒரு சில நிமிடங்கள் ஒரே ஒரு வார்த்தையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், அந்த வார்த்தை: *வெளிப்படுத்துதல்கள்* என்பதாகும்.

5 வாழ்க்கையில் வெளிப்படுத்தல்கள் ஏராளமான உள்ளன. பூமியில் வாழும் ஒவ்வொருவரும், தன் வாழ்வில் ஒரு கட்டத்தில், தான் எங்கிருந்து வந்தான், இங்குத் தன் நோக்கம் என்ன, இனி எங்கே செல்லப் போகிறான் என்பதைப் பற்றி நின்று சிந்திக்காமல் இருப்பதில்லை. ஒவ்வொருவரும் திரைக்கு அப்பால் நோக்கிப் பார்க்க விரும்புகின்றனர்.

6 வேதாகமத்தில் உள்ள மிகப் பழமையான புத்தகம், யோபு, இந்தக் கோத்திரப்பிதாவின் புத்தகத்திலிருந்து இங்கே வாசிக்கையில், அவன் இந்தக் காரியத்தைக் கண்டறிய முயற்சித்துக் கொண்டிருந்தான். அவன் மரணத்திற்குப் பிறகு ஒரு—ஒரு ஜீவன் என்பதை வெளிப்படுத்தி, தன்னுடைய தேவனுடைய தூண்டுதலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான்.

7 நாம் இதைப் போன்ற ஏதோ ஒரு காரியத்தை எதிர்கொள்ளும்போது, இது தான் எல்லாமே என்று நாம் சில சமயங்களில் அதை உணருகிறோம். ஆனால் அதுவல்ல. அது மாறுதலாயுள்ளது. அது…ஒரு படி உயர்வானது. அது ஒரு ஜீவனிலிருந்து மற்றொரு ஜீவனிற்கு கடந்து சென்று கொண்டிருக்கிறது.

8 தீர்க்கதரிசியாகிய, யோபு, இந்தக் காரியங்களின் பேரில் சிந்தித்துக் கொண்டிருக்கையில், அவன் அதைத் தாவரவியல், தாவர ஜீவன், மர ஜீவன்களில் கண்டறிந்தான். எனவே தேவன் தம்முடைய சிருஷ்டிப்பில் எப்படி இருக்க வேண்டும் என்பதை, அவன் கவனித்துக் கொண்டிருந்தான்; அதாவது அவர் சிருஷ்டிப்பை உண்டாக்கினால், அப்பொழுது அவர் சிருஷ்டிப்பில் ஜீவிக்க வேண்டும், ஏனென்றால் அவர் அதை ஒரு நோக்கத்திற்காகவே உண்டாக்கினார், ஒரு மனிதன் கட்டப்போகும் ஒரு வீட்டைப் போன்றே, அவர் தாமே ஜீவிப்பதற்காகவே. தேவனுடைய சிருஷ்டிப்பு அனைத்திலும் உள்ள இந்த மிகச் சிறிய உயிர்கள் அனைத்தும் அவற்றின் சிருஷ்டிகருக்குக் கீழ்ப்பட்டவை. மேலும் அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான், அதாவது, ஒரு புயல் வந்து ஒரு மாபெரும் மரத்தைச் சாய்த்தாலும், அது அந்த மரத்தின் முடிவல்ல. அது மீண்டும் ஜீவிக்கும். மரம் மரித்துப் போனால், அது உயிர் வாழும்.

9 அநேக சமயங்களில், நாம் குழப்பமடைந்திருக்கும்போது, நாம் நம்மைச் சுற்றிலும் நோக்கிப் பார்ப்போமேயானால், நீங்கள் தேவனை எங்கும் காண முடியும். இப்பொழுது மரத்தைப் போன்றே நாம் அவரை எடுத்துக் கொள்வோம். அந்த மரம் இங்கே வைக்கப்பட்டிருந்தால்…

10 நாம் இங்கே ஒரு நோக்கத்தைச் சேவிக்க இருப்பதுபோல, ஒவ்வொரு காரியமும் ஒரு நோக்கத்தைச் சேவிக்கவே இங்கே உள்ளது, ஒரு நோக்கத்திற்காக ஊழியம் செய்ய எங்களுடைய

சகோதரி இங்கே இருந்ததைப் போன்றே, நாம் யாவரும் இங்கே தேவனுடைய ஒரு நோக்கத்திற்காகவே இருக்கிறோம். அந்த நோக்கம் என்னவென்பதை நாம் கண்டறிந்து, அதன்பின்னர் அதை நன்முறையில் சேவிக்க முடிந்தால், அங்கே, நிச்சயமாகவே, ஒரு தாவரவியல் ஜீவியத்தின் உயிர்த்தெழுதலைக் குறித்து தேவன் போதிய சிந்தையுள்ளவராயிருந்தால், மானிட ஜீவனுக்கான ஒரு உயிர்த்தெழுதலைக் குறித்தே அவர் போதிய சிந்தையுள்ளவராய் இருக்கிறார்.

11 எனவே கோத்திரப் பிதாவான யோபு, அந்த—அந்த மரம், அது மரித்துப் போனாலும், அது மீண்டும் ஜீவித்தது என்பதைக் கவனித்தான். எப்படியாய் அந்தக் கோடைகாலமும், குளிர்காலமும் அதனுடைய ஜீவியங்களை மாற்றினது, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சாட்சியை விட்டுச் சென்றது. கோடைக்காலத்தில் அந்த மரம் உயிரோடு இருப்பதையும், குளிர்காலத்தில் அது இறந்துவிடுவதையும், மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த இலைகளை வைத்து அவன் கவனித்தான்.

12 இப்பொழுது, ஜீவ விருட்சம் உண்டு என்று நாம் வேதத்தில் போதிக்கப்பட்டிருக்கிறோம், அது ஏதேன் தோட்டத்தில் இருந்தது; இந்த ஜீவ விருட்சத்தில்தான் கிறிஸ்தவர்கள் இந்த மரத்தின் இலையாகத் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

13 இப்பொழுது குளிர்காலத்தில் இலைகள் அழகாக இருக்கும்போது, ஏன், அவை, அல்லது, கோடைக்காலத்தில், இலைகள் அழகாகவும் பச்சையாகவும் இருக்கும்போது, சிறிது நேரத்தில் உறைபனி வந்து அவைகளுக்கு வித்தியாசமான நிறங்களை உண்டாக்க, அவைகள் மரத்திலிருந்து விழுகின்றன, ஜீவன் மரத்தின் வேருக்குள் திரும்பிச் செல்கிறது. நாம் சற்று கவனிப்போமேயானால், அது ஒரு இரகசியமான காரியமாய் உள்ளது.

14 இங்கே சில காலத்திற்கு முன்பு, நான் ஒரு நாத்திகன் என்று கூறிக்கொள்ளும் ஒரு மனிதனிடம், ஒரு அவிசுவாசியிடம் பேச வேண்டிய சூழல் எனக்கு ஏற்பட்டது. நாங்கள் அவருக்குச் சொந்தமான ஒரு ஆப்பிள் மரத்தின் அருகே நின்று கொண்டிருந்தோம். நான் அவரிடம் அந்த மரம் எத்தனை வயதானது என்று கேட்டேன், அவர் என்னிடம் *பல வருடங்கள்* என்று சொன்னார், அது ஒவ்வொரு ஆண்டும் எத்தனை மரக்கால் ஆப்பிள்களை உற்பத்தி செய்தது. இது ஆகஸ்ட் மாதத்தின் துவக்கத்தில் நடந்தது, ஆப்பிள்கள் ஏற்கனவே விழுந்து கொண்டிருந்ததையும், இலைகள் பழுப்பு நிறமாக மாறிக் கொண்டிருந்ததையும், நான் அறிந்து கவனித்தேன், நான் அவரிடம், “நான் உம்மிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்” என்றேன். நான், “ஏன் இலைகள் பழுப்பு நிறமாக மாறி, உறைபனி தாக்குவதற்கு

முன்பு மரத்திலிருந்து உதிர்ந்து கொண்டிருக்கின்றன?” என்று கேட்டேன்.

15 “பாருங்கள்,” அவர், “அது வரப்போகும் குளிர்காலம், அவைகள் பழுப்பு நிறமாக மாறுவதற்கு காரணம் இலையை விட்டு ஜீவன் போய்விட்டதே” என்றார்.

நான், “அந்த ஜீவன் எங்கே சென்றது?” என்று கேட்டேன்.

16 அவர் என்னிடத்தில், “மரத்தின் வேருக்குத் திரும்பினது, அது எங்கிருந்து வந்ததோ அங்கே” என்றார்.

நான், “அது இலையின் கடைசி இலையா?” என்று கேட்டேன்.

17 அவர், “இல்லை, அந்த ஜீவன் மீண்டும் ஒரு புதிய இலையோடு, அடுத்த வசந்த காலத்தில் திரும்ப வரும்” என்றார். அவர் அதற்கு முன்பு அதைக் கவனித்ததேயில்லை.

18 அப்பொழுது நான், “அப்படியானால், ஐயா, நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்: குளிர்காலம் தொடங்குவதற்கு முன்பே, எந்தப் பேரறிவு அந்த மரத்திலிருந்து இலையைப் பறித்து, மற்றொரு பருவம் வரும் வரை பாதுகாப்பிற்காகத் தன் உயிரை மீண்டும் மண்ணுக்குள் அனுப்புகிறது?” என்று கேட்டேன். நீங்கள் ஒரு வாளியில் தண்ணீரை ஊற்றி, அதை ஒரு கம்பத்தின் மேல் பொருத்தினால், அது பருவகாலத்தில் ஒருபோதும் மாறாது. எனவே ஜீவியத்தை எஜமானாக்குகிற தேவன் ஒருவர் உண்டு என்பதையே அது காண்பிக்கிறது.”

19 கிறிஸ்தவர்களென்று உரிமை கோருகிற, நாம் தேவனுடைய ஆவியினால் பிறந்து, தேவனுடைய கிருபையினால், ஒரு மரண விருட்சத்திலிருந்து ஒரு ஜீவ விருட்சத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறோம். இலைகளில் ஒன்று உதிரும்போது, நான் அந்தச் சாட்சியை...இந்த அற்புதமான சபையிலிருந்து கேட்டதுபோல, கில்ட் எட்ஜ் பாப்டிஸ்டு சபையில், என்னுடைய விலையேறப்பெற்ற நண்பர்கள் அநேகர் அங்கத்தினர்களாக உள்ளனர், அதனுடைய இலைகளில் ஒன்று உதிர்ந்து விட்டது. அந்த ஜீவன் ஏதோ ஒரு நோக்கத்திற்காக அதை அளித்த தேவனிடத்திற்கு திரும்பிச் சென்றுவிட்டது என்பதை நாம் அறிவோம், பொதுவான உயிர்த்தெழுதலில் மீண்டும் வருவதற்கு மாத்திரமே; ஆயிர வருட அரசாட்சியில் மீண்டும் விழுந்து விடுவதில்லை. மகத்தான நேரம் வந்து கொண்டிருக்கிறது.

20 யோபு இந்தக் காரியங்களைக் கவனித்திருந்தான். அப்பொழுது அவன் சூரியனின் ஜீவனைக் கவனித்தான்.

21 நீங்கள் கவனிப்பீர்களேயானால், ஒரு காலையில் சூரியன் உதயமாகிறது, அது ஒரு குழந்தையாயிருக்கிறது. அதனுடைய கதிர்கள் பலவீனமானவை. அதன்பின்னர் அது ஏறக்குறைய ஒன்பது அல்லது பத்து மணிக்கு அதனுடைய வாலிபப் பருவத்திற்குள்

வருகிறது. அதன்பின்னர் மதிய நேரத்தில், மத்தியான வேளையில், அது அதனுடைய பலத்தில் உள்ளது. அதன்பின்னர் அது விழத் துவங்கி, முடிவில் மீண்டும் மேற்கில் அஸ்தமித்து, அன்றைய பொழுதிற்கு அது மரித்து விடுகிறது. நாம் அதைச் சூரியனின் முடிவு என்று அழைக்கலாமா? இல்லை. அடுத்த நாள் காலையில் நமக்காக ஒரு புதிய நாளைக் கொண்டு வரும்படியாக அது மீண்டும் வருகிறது.

22 இப்பொழுது, இது என்ன? அது தேவனுடைய வெளிப்படுத்துதலாகும். *வெளிப்படுத்துதல்* என்ற வார்த்தை "ஒரு உணர்வை வெளிப்படுத்துதல்" என்று பொருள்படுகிறது. மரணம் நம்மை நித்தியமாகப் பிரிக்காதபடிக்கு, நமக்கான அவருடைய உணர்வை நாம் அறிந்துகொள்ளும்படியாக, அது தேவனுடைய வெளிப்படுத்தும்…வெளிப்படுத்துதலாய் உள்ளது. நாம் மீண்டும் எழும்பி, மீண்டும் திரும்பி வருவோம்.

23 ஒவ்வொரு முறையும் பூமியில் விதை மரித்து, வருடத்தின் இலையுதிர் காலத்தில், இந்த மலர்களைப் போலவே, அவைகள், உறைபனி அவைகளைத் தாக்கும்போது, அவைகளிலிருந்து சிறு விதைகள் உதிர்ந்து விடுகின்றன, விதையானது நிலத்திற்குள் செல்கிறது. அது விநோதமாகத் தென்பட்டாலும், அதே சமயத்தில் அது உண்மையாயிருக்கிறது, தேவன் மிகவும் முடிவற்றவராயிருக்கிறபடியால் அவர் எந்தக் காரியத்தையும் கண்டுகொள்ளாமல் விடுவதில்லை. அவர் தம்முடைய மலருக்காக ஒரு சவ ஊர்வலத்தை நடத்துகிறார். உறைபனி அவைகளை தாக்கியபிறகு, அதன்பின்னர் இலையுதிர் மழையும், மகத்தான பெரிய கண்ணீரும், மழைத் துளிகளும், வானத்திலிருந்து துளிகள், அந்த மலர் விதையைப் புதைத்து, அதன் மேல் தட்டும்போது, அது பூமிக்கு அடியில் ஒரு அங்குலம் அல்லது இரண்டு அங்குலம் செல்லக்கூடும். பிறகு குளிரான குளிர்காலக் காற்று வீசத் தொடங்குகிறது, அந்தச் சிறிய இதழ்கள் உதிர்ந்துவிடுகின்றன, தண்டும் மறைந்துவிடுகிறது, பிறகு அந்தக் கிழங்கு உறைந்து காய்ந்துவிடுகிறது. பிறகு அந்தச் சிறிய விதை உறைந்து, அதிலுள்ள சதைப்பகுதி வெளியேறிவிடுகிறது. மேலும், ஏன், வசந்த காலத்தில், நீங்கள் அதில் விடப்பட்ட ஒன்றையும் கண்டுபிடிக்க முடியாது.

24 ஆனால் அது மலரின் முடிவா? ஒருபோதும் இல்லை. அது ஒரு நோக்கத்திற்காகவே இங்கு வைக்கப்பட்டது. அது அதனுடைய நோக்கத்தை நன்கு நிறைவேற்றிவிட்டால், அப்பொழுது தேவன் நமக்கு தம்முடைய வெளிப்படுத்துதலை அந்த மலரின் மூலம் அறிந்து கொள்ளச் செய்கிறார்.

25 வெப்பமான கதிரைக் கொண்டுவர சூரியன் பூமிக்கு இன்னும் கொஞ்சம் நெருங்கி வருவது எவ்வளவு உறுதியோ, அந்த ஜீவனை உங்களால் எங்கும் மறைக்க முடியாது. நீங்கள் அதை ஒரு பாறையால் மூடிவிடலாம். நீங்கள் குளிர்காலத்தில் காரையை அமைக்கும்போது, வசந்த காலத்தில் புல் அடர்த்தியாக இருக்கும்

இடத்தை நீங்கள் எப்போதாவது கவனித்தீர்களா? காரையின் விளிம்பைச் சுற்றிலும் உள்ளது. அது ஏன்? அது பாறையின் கீழிருக்கிற அந்த ஜீவன். சூரியன் பூமியை குளிப்பாட்டத் துவங்கும்போது, உங்களால் ஜீவனைப் பிடித்து வைக்க முடியாது. அது அந்தக் காரையின் கீழிருந்து அதனுடைய வழியைக் கண்டறிந்து, தேவனைத் துதிக்கும்படி, அதனுடைய சிறிய தலையை மேலே உயர்த்தும், ஏனென்றால் சூரியன் உயிர்த்தெழுதலாயிருக்கிறது. சூ-ரி-ய-ன் எல்லா தாவரவியல் ஜீவியங்களின் உயிர்த்தெழுதலாய் உள்ளது. சூரியன் பிரகாசிக்கும் வரைக்கும் உங்களால் அதை மறைக்க முடியாது.

26 கு-மா-ர-ன் அநேக சமயங்களில், தொலைவில் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் அவர் பிரகாசிக்கத் துவங்கும்போது, "நீதியின் சூரியன் உதிக்கும், அவருடைய செட்டையின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்." ஒவ்வொரு ஜீவனும், அது எங்கே புதைக்கப்பட்டிருந்தாலும், எவ்வளவு ஆழத்தில், எவ்வளவு தூரம் தண்ணீரில் இருந்தாலும், அல்லது மணலிலோ, பாறைகளிலோ இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அது தேவனுடைய மகிமைக்கென்று எழும்பும்.

27 ஏனென்றால், தேவன் நமக்குக் வெளிப்படுத்தி, அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை அப்படியே நமக்குக் காண்பித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய நோக்கம் மலர்கள் மூலமாகவும், சூரியன் மூலமாகவும், மரங்கள் மூலமாகவும், எல்லா ஜீவன்களினூடாகவும் நமக்குக் காட்டுவது, அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார் என்பதே. தேவன் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றும்போது அவருடைய ஜீவனை உயிர்த்தெழச் செய்கிறார்.

28 அந்த மலர் அதனுடைய நோக்கத்தை நிறைவேற்றுமானால், தேவன் அந்த மலருக்காக ஒரு உயிர்த்தெழுதலை அளித்தால், தங்களுடைய வாழ்க்கையின் நோக்கத்திற்கு சேவை செய்கிற நம்முடைய சகோதரிக்கு எவ்வளவு அதிகமாக இருக்கும். தங்களுடைய நோக்கத்திற்காகச் சேவை செய்கிறவர்களுக்கு தேவன் ஒரு உயிர்த்தெழுதலைக் கொண்டிருக்கிறார். நாம் நம்முடைய நோக்கத்தைக் கண்டறிந்து, அதன்பின்னர் அவர்களுக்குச் சேவை செய்ய முடியும்.

29 இந்தச் சிறிய மலர்களை, நீங்கள் அவைகளைக் குறித்து கேட்கலாம். அவைகள் இந்தப் பிற்பகல் ஒரு நோக்கத்திற்காகச் சேவை செய்ய இங்குள்ளன. அந்தவிதமாகத்தான் இந்த மலர்கள், தேவன் அவைகளை ஒரு நோக்கத்திற்காகவே வைத்திருந்தார். அது தொடர்ந்து செல்லக்கூடும்.

30 நீங்கள் கவனிப்பீர்களேயானால், இந்த மலர்கள் அனைத்தும் ஒரே நிறமுள்ள மலர்களல்ல. அவைகள் நிறத்தில் வித்தியாசப்பட்டு,

தேவன் பல்வேறுபட்ட ஒரு தேவன் என்பதைக் காண்பிக்கிறது. அவர் வெவ்வேறு நிறங்களை விரும்புகிறார். அது ஒன்று சேர்ந்து அவர் நேசிக்கிற பூச்செண்டை உண்டாக்குகிறது. தேவன், வெவ்வேறு வகைகளின் தேவனாய் இருக்கிறார். அவர் தம்முடைய வெள்ளை மலர்களை உடையவராயிருக்கிறார். அவர் தம்முடைய சிவந்த மலர்களை உடையவராயிருக்கிறார். அவருடைய, எல்லா வண்ண மலர்களையும் ஒன்று சேர்த்து வைப்பது அவருடைய நோக்கத்திற்கு சேவை செய்கிறது.

31 அவர் பெரிய மலைகளையும், சிறிய குன்றுகளையும், சமவெளிகளையும் உடையவராயிருக்கிறார். அவருக்கு வனாந்திரங்கள் உண்டு. அவருக்குச் சமுத்திரம் உண்டு. அவர் ஓக் மரத்தை, பனை மரத்தை உடையவராயிருக்கிறார். ஒவ்வொரு காரியமும் அதனுடைய இடத்தில் ஒன்றாக இணைகிறது, அங்கே தேவன், இயற்கை எல்லாவற்றுக்கும் தேவனாகிய அவர் ஜீவித்து மகிழ்ந்து, காலத்திற்கேற்றவாறு அவருடைய சிருஷ்டிகளில் ஜீவிப்பது, அதுவே அவருடைய நோக்கத்தைச் சேவிப்பதாகும்.

32 அது எதிர்காலத்தில் மீண்டும் சேவை செய்வதற்காக, அதை உயிர்த்தெழச் செய்யவும், அதற்கு ஒரு தப்பிக்கும் வழியை ஏற்படுத்தவும் அவர் நினைத்தால், எவ்வளவு அதிகமாக நாம் யாராயிருந்தாலும், என்ன இனம், நிறம், ஸ்தாபனம், அல்லது இன்னும் என்னவாயிருந்தாலும், தேவனுடைய பிரசன்னத்தின் ஐக்கியத்தில், அவருடைய ஆசீர்வாதத்தில் ஒன்று சேர்ந்து வாசம் செய்ய முடியும். மலருக்கு உயிர்த்தெழுதல் இருப்பது போலவே, என்றோ ஒரு நாள், நிச்சயமாக ஒரு உயிர்த்தெழுதல் இருக்கும். நாம் யாவரும் அதைக் காண்கிறோம். நாம் யாவரும் அதை விசுவாசிக்கிறோம். இந்தக் காரியங்கள் யாவும் வெளிப்படுத்துதலாய் உள்ளன என்பதை நாம் யாவரும் அறிவோம். நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிற ஒரு உணர்வை, அவைகள் சாட்சி பகர்ந்து, நமக்குச் சொல்லிக் கொண்டு, செய்து கொண்டிருக்கின்றன.

33 இந்த மலர்களை அனுப்பிய ஜனங்கள், இந்த மலர்களை அனுப்பிய நம்முடைய சகோதரியின் நண்பர்கள், அவர்கள் குடும்பத்தாருக்கும் தெரியப்படுத்தி, ஒரு நண்பர், ஒரு சகோதரியின் அல்லது—அல்லது அன்பார்ந்த ஒருவரின் என்ற தங்களுடைய பரிவிரக்க உணர்வை அவர்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெளிப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அவை வெளிப்படுத்துதல்கள், எதையோ அறியச் செய்தல், அறிவித்தல்.

34 நாம் மணிக்கணக்கில் பேசக்கூடிய இந்த எல்லா காரியங்களும், அதாவது மானிட இனத்திற்கான தேவனுடைய வெளிப்படுத்துதல்களும், இவை அனைத்திற்கும் அவரவர் பங்கு உண்டு, அதை அவை சிறப்பாகச் செய்கின்றன. ஒவ்வொரு மலரும்,

ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு சூரிய உதயமும், ஒவ்வொரு சூரிய அஸ்தமனமும், ஒவ்வொரு காரியமும் அதனுடைய பங்கை நன்கு வகிக்கிறது. ஆனால் அந்தத் தேவனுடைய வெளிப்படுத்துதல்கள் யாவும் நமக்குத் தெரியப்படுத்தி, என்றோ ஒரு நாள் அவர் ஒரு மகத்தான வெளிப்படுத்துதலை, ஒரு நித்திய வெளிப்படுத்துதலைச் செய்யப் போகிறார் என்று நமக்கு ஒரு மாதிரியை அளிக்கிறார்.

35 அதன்பின்னர் அவர் தம்முடைய வெளிப்படுத்தின சாயலை, அவருடைய குமாரனின் ரூபத்தில் நமக்கு அனுப்பினார். தேவன் தம்முடைய குமாரனை, நம்மைக் குறித்து என்ன நினைத்தார் என்பதை மானிட வர்க்கத்திற்கு அறிவிக்கும்படியாக வெளிப்படுத்தப்பட்ட தம்முடைய சாயலில் அவரை அனுப்பினார். அவர் தன்னுடைய தோற்றத்தை மாற்றினார். அவர் மனிதனானார். அவர் நம்மில் ஒருவரானார்.

36 நித்திய பிதாவாகிய தேவனிடத்திலிருந்து, உலகம் உண்டாவதற்கு முன்னரே எல்லா இடத்தையும், நேரத்தையும் நிரப்பின மகத்தான சிருஷ்டிகரிடத்திலிருந்தே. அங்கே ஒரு— ஒரு அளவோ அல்லது ஒரு ஒளி அளவோ கூட இல்லை, ஒரு அணுவோ அல்லது ஒரு மூலக்கூறோ கூட இல்லை, அவர் அப்பொழுதும் தேவனாய் இருந்தார். அவர் எப்பொழுதும் தேவனாயிருப்பார். ஆனால் மகத்தான ஒருவர்…இரவில் உங்களால் மேலே நோக்கிப் பார்க்க முடிந்தால், சூரிய குடும்பத்தில் உள்ள நட்சத்திரங்களைக் காண முடியும். சில ஆண்டுகளுக்கு முன்பு, இந்தப் பெரிய தொலைநோக்கி வழியாகப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது, அதில், நூற்று இருபது மில்லியன் ஆண்டுகள் ஒளிவெளியை, ஒளி அளவைகளைக் கொண்டு பார்க்க முடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள். அதற்கு அப்பால் அவர் ஆதிக்கம் செலுத்துகிற சந்திரன்களும், நட்சத்திரங்களும், உலகங்களும் உள்ளன.

37 அதன்பின்னர் அவர் மிகவும் மகத்தானவராயிருக்கிறார் என்பதை அறிந்து, அவர் நமக்கு ஒரு வெளிப்பாட்டை வெளிப்படுத்தும்படிக்கு அவ்வளவு சிந்தையுள்ளவராயிருந்தார். அதே சமயத்தில் அவர் என்னவாயிருந்தார் என்பதை வெளிப்படுத்தும்படியாக, அவர் ஒரு மானிட ரூபத்தில் இறங்கி வந்தார். அவர் ஒரு துக்கமான மனிதனாகி, துக்கத்தை அறிந்தவரானார். அவர் ஒரு மானிட வாழ்க்கை வாழ்ந்தார். அவருடைய தலையைச் சாய்க்க அவருக்கு இடமில்லை. தேவன் என்னவாயிருந்தார் என்பதை அவர் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். நாம் சுகவீனமாயிருந்தபோது, அவர் நம்முடைய வியாதியஸ்தரை சுகப்படுத்தினார். அவர் தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சாயலாயிருந்தார் என்பதைக் காண்பிக்கும்படிக்கு, அவர் மரித்தோரை உயிரோடெழுப்பினார். நாமும் கூட இந்தச் சிறு வெளிப்படுத்துதலை நோக்கிப் பார்த்து,

தேவனைக் காணும்படியாக, அவர் நம்மெல்லாருக்காகவும் ஒரு திட்டத்தை வகுத்தார். அப்பொழுது நாம் மேலே நோக்கிப் பார்த்து, தேவனுடைய மகத்தான வெளிப்பாட்டைக் காண முடியும், இந்த நேரங்கள் வரும்போது, இது அதற்கு முடிவல்ல என்ற உறுதியை உடையவர்களாயிருக்க வேண்டும்.

38 ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் நம்முடைய சகோதரி, பாடுகையில், கூறின அந்த வெளிப்படுத்துதல் எனக்குப் பிடித்திருக்கிறது, "இது என்னுடைய சகோதரி. என்னால் அதை இந்தவிதமாகப் பாட முடியாது" என்று கூறினாள், அவள் எங்கே இருக்கிறாள் என்பது அவள் அறிந்திருந்தாலொழிய. பார்த்தீர்களா?

39 நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறிந்துகொள்ள ஒரு வழி உண்டு, ஏனென்றால் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சாயலானது இந்தத் திட்டத்தை வகுத்துள்ளது. மேலும், இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்பவன் நித்திய ஜீவனை உடையவனாயிருப்பான் என்று அவர் கூறினார். யோவான் 5:24, "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்"என்று கூறப்பட்டுள்ளது.

40 நமக்காக ஒரு வழியை உண்டுபண்ணின இயேசு கிறிஸ்துவே எல்லாவற்றிலும் மகத்தான வெளிப்படுத்துதலாயிருந்தார். அவர் இந்த மலர்கள், தாவரவியல் வாழ்க்கை போன்ற எல்லா வெளிப்படுத்துதல்களையும் நிறைவேற்றி, உறுதிப்படுத்தினார், சூரியனும், சூரிய குடும்பமும் அவருடைய வருகைக்கு முன்பாகச் சாட்சி பகர்ந்துள்ளது, நம்மை உறுதியாக அதை விசுவாசிக்கச் செய்யும் நீதியான ஒருவர் வருகிறார், ஏனென்றால் அவர் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சாயலாயிருப்பார். அவர் வந்து, அவர் என்ன செய்தாரோ அதைச் செய்தபோது, இந்த வெளிப்படுத்துதல்கள் சரியாயிருந்தன என்பதை அவர் நிரூபித்தார். அவர் அவர்களுக்கு ரூபகாரப்படுத்தினார். ஏனென்றால் ஒரு மலர் மீண்டும் எழும்புகிறது, மரம் மீண்டும் எழும்புகிறது, சூரியன் மீண்டும் உதயமாகிறது, அவ்வாறே கிறிஸ்தவன் மீண்டும் எழும்புவான். எழும்ப வேண்டும். ஏனென்றால், தேவன், வெளிப்படுத்தப்பட்ட ஒரு மானிட சாயலில், அல்லது வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சாயலில் உள்ள ஒரு மானிட வர்க்கம், அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் அதை நிரூபித்தார்.

41 பின்பு, அங்கே, தீர்க்கதரிசி இவைகள் நடப்பதைக் கண்டபோது; யோபு, அவன் எல்லா தாவரவியல் வாழ்க்கை போன்றவற்றையும் கண்டான். அப்படியானால், வேதாகமத்தை நன்கு அறிந்திருக்கிற நாம் அதை அறிவோம். இந்தச் சாம்பல் குவியலின் மேல் உட்கார்ந்து, துயரத்தில், தொல்லை அவனைத் தாக்கியிருந்தது.

அவன் இரகசியமாகப் பாவம் செய்திருந்தான்…என்று அவனுடைய சபை அங்கத்தினர்கள் அவனிடம் கூறியிருந்தனர்.

42 அநேக முறை அது “ஒரு நபர் அகால மரணம் அல்லது ஏதோ ஒன்று, அது அவர்கள் செய்த ஏதோ ஒரு பாவமாய் இருக்கலாம். அவர்கள் ஏதோ தவறு செய்தார்கள்” என்று கூறப்பட்டுள்ளது. இல்லை…ஒரு கிறிஸ்தவனின் காரியம் அப்படிப்பட்டதல்ல.

43 அவன் இந்த மகத்தான, முடிவான வெளிப்படுத்துதலைக் கண்டபோது, தேவன் தம்முடைய திட்டத்தை இயேசு கிறிஸ்து மூலமாக அறிவிக்க, அவன் சத்தமிட்டு அழுதான். மின்னல்கள் பிரகாசித்தபோது, இடிமுழக்கங்கள் முழங்கினபோது, அவன், “என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்” என்றான். அவன் அநேக நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் அந்த முடிவான வெளிப்படுத்துதலைக் கண்டான். ஆனால் அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தபடியால், தேவனுடைய மகத்தான வெளிப்படுத்துதலின் வருகையை அவன் தரிசனத்தில் கண்டான்.

44 அவனால் கீழ் நோக்கிப் பார்த்து, விதைகளின் உயிர்த்தெழுதலைக் காண முடிந்தது. அவனால் மரங்களின் உயிர்த்தெழுதலைக் காண முடிந்தது. சூரியனின் உயிர்த்தெழுதல், அது தன்னுடைய காலத்தை நிறைவு செய்தபிறகு, மீண்டும் உதித்தது; ஒரு நாள் சேவை செய்து, மற்றொரு நாளுக்காக எழுப்பப்பட்டது. ஒரு அடக்க ஆராதனைக்கான மலர்கள், மரித்து, மற்றொரு அடக்க ஆராதனைக்காக உயிர்த்தெழுதல். ஒவ்வொரு காரியமும் அதனுடைய நோக்கத்திற்காகச் சேவை செய்கிறது. அப்பொழுது அவன் அந்த நீதிமானின் வருகையைத் தூரத்தில் கண்டு, “என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன்” என்று சத்தமிட்டான்.

45 தாவீது, “என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்,” என்றும், ஏனெனில் அவருடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்; அவருடைய ஆத்துமாவை பாதாளத்தில் விடீர்” என்றான். தேவனின் அந்தப் பரிபூரண வெளிப்படுத்துதலாகிய அந்த நாளில், மரணம் என்பது; பாதையின் முடிவல்ல என்பதை மனிதனுக்கு உணர்த்துவதற்காக அவர் செய்யவிருந்ததை அவன் கண்டான்.

46 இது முடிவல்ல. இதுவே துவக்கமாயுள்ளது. அது துக்கத்தின் முடிவாயுள்ளது. இது தீர்மானத்தின் முடிவின் காலம். ஆனால் இதுவோ சந்தோஷமும், பலனுடைய நேரத்தின் துவக்கமாயுள்ளது. அது எல்லாவற்றிற்கும் முடிவல்ல. அது அழிவுள்ள காரியங்களின் முடிவாக, அழிவில்லாத காரியத்தைத் துவங்குவதாகும். அவள்

இளைப்பாறச் சென்றுவிட்டாள். தேவன் அவளுடைய ஆத்துமாவை இளைப்பாறச் செய்யட்டும்.

47 இப்பொழுது, அவன் இந்த மகத்தான வெளிப்படுத்துதலைக் கூறி அழுதான், ஏனென்றால் என்ன நடக்கப் போகிறது என்பதை அவன் கண்டான்.

48 இப்பொழுது நாம் இந்த முடிவுக்கு வருவோம். ஒரு அண்டை வீட்டுக்காரர், ஒரு சகோதரி, ஒரு மனைவி, ஒரு தாய் ஆகியோரைப் பற்றிய நமது உணர்வை வெளிப்படுத்தவோ அல்லது தெரியப்படுத்தவோ நாம் இன்று இங்குக் கூடியிருக்கிறோம். அந்தக் காரணத்தினால்தான் நாம் இந்தப் பிற்பகலில் கூடி வந்திருக்கிறோம்; நம்முடைய உணர்வை, நம்முடைய இழப்பை வெளிப்படுத்தவே. அந்தக் காரணத்தினால்தான் நாங்கள் இதைச் செய்ய இங்கிருக்கிறோம். தகப்பன் மனைவியின் இழப்பை வெளிப்படுத்த வேண்டும்; பிள்ளைகள், தாய்; அண்டை வீட்டாரோ அல்லது சகோதரியோ.

49 நாங்கள் போதகர்கள்…கட்டிடத்தின் வழியே அவர்கள், அந்தச் சகோதரி தங்களுக்கும் தங்கள் சபைக்கும் எவ்வளவு முக்கியமானவராக இருந்தார் என்பதைத் தெளிவாக உணர்த்தும் அற்புதமான, மகிமையான, ஆறுதலான கருத்துக்களைத் தெரிவிப்பதை நான் கேட்டேன். ஊழியக்காரர்களாகிய நாங்கள் இன்று பிற்பகல் கூடியிருக்கிறோம், நிச்சயமாக, எங்கள் இதயங்களிலும் கூட நாங்கள் துக்கத்தை உணர்கிறோம், ஆனால், இந்த விஷயம் முழுவதுமுள்ள தேவனுடைய சத்தியமாகிய அவருடைய வெளிப்படுத்துதலை அறிவிப்பதற்காகவே நாங்களும் வந்திருக்கிறோம். இதைக் குறித்து தேவன் கூறுவதை வெளிப்படுத்தவும், ஜனங்களுடைய இருதயங்களை ஆறுதல்படுத்தும்படியாக; இந்த அதிர்ச்சி எவ்வளவு கடினமாக இருந்தாலும், அவர்களுக்குத் தெரியப்படுத்தவும் நாங்கள் வந்திருக்கிறோம், அதேசமயத்தில் அதை இந்தவிதமாகச் செய்யச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய ஏற்பாடு உள்ளது, அது அவருடைய திட்டமாய் உள்ளது. இது முடிவல்ல. இது ஒரு புதிய ஜீவனின் துவக்கமாய் உள்ளது.

50 அப்பொழுது, தேவன் தம்முடைய வார்த்தையில் இவைகளைக் குறித்துப் போதிக்கிற நாமோ, நமது வெளிப்படுத்துதலைக் கொடுக்க வருகிறோம். இந்தப் பிற்பகல் இந்த ஒன்றின் பேரில் நான் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறேன், தேவனுடைய வார்த்தையைக் குறித்து நாம் எல்லாருமே ஒரே காரியத்தை வெளிப்படுத்த முடியும், ஏனென்றால் அவள் அதை நிறைவேற்றினாள்.

51 சகோதரி பெல், நாம் இங்கே கூடாரத்தில் அவளை அறிந்திருந்தோம், ஒரு அழகான, பரிசுத்தமான, கிறிஸ்தவ ஸ்திரீ, அவள் தன்னுடைய வெளிப்படுத்துதல்களையும் கூட

வெளிப்படுத்தினாள். அவள் தேவனைக் குறித்த தன்னுடைய உணர்வை வெளிப்படுத்தினாள். கொஞ்ச நேரத்திற்கு முன்பு அந்த இரங்கல் செய்தியை நான் கேட்டதன்படி, சகோதரர் ஜிம் அவளைத் திருமணம் செய்வதற்கு முன்பே, டென்னசியில் அவள் தன் முடிவை எடுத்துவிட்டாள் என்று நான் நினைக்கிறேன். அவள் தன் வெளிப்படுத்துதலைத் தெரிவித்தாள். ஆகவே, அது சாட்சிகளாயிருக்கின்றன. எனக்குத் தெரிந்த வரையில், அந்த நாள் முதற்கொண்டு, அந்த வெளிப்படுத்துதலை வெளிப்படுத்துவதை ஒருபோதும் நிறுத்தவேயில்லை. ஒருக்கால், இன்றைக்கு, பரலோகத்தின் தாழ்வாரங்களில், எங்கோ அப்பால் உள்ள நித்திய மகிமை மண்டலங்களில், தேவனுடைய வீதிகளில் நடந்து, இன்னமும் அதை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள். இந்த அழிவுள்ள மண்டலத்தின் நிழல்களுக்கு அப்பால், அவள் இன்னமும் அதை வெளிப்படுத்துகிறாள்.

52 சகோதரி பெல், நாம் அவளை அறிந்திருக்கிறபடி, அவளுடைய சாட்சியைக் குறித்து வெட்கப்படவில்லை. அவள் சாட்சியை அளிக்கும்போது ஒருமுறை கூட வெட்கப்படவில்லை. ஒருமுறை கூட அவள் எதையும் சொல்லத் தயங்கவில்லை. அவள் அதை வெளிப்படுத்தினாள், அவள் வெட்கப்படவில்லை. அவள் அங்கே பின்னால் கைகளை உயர்த்தியபடி நிற்பதையும், அவள் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடுவதையும் நான் எப்படியாய் பார்த்திருக்கிறேன். இவள் இங்கே இந்தப் பிரசங்க மேடையில் நின்று, இங்கிருந்து தொலைவில் உள்ள, ஒரு தேசத்தைக் குறித்து, முழு சபையையும் ஒரு கூக்குரலுக்குள்ளாகச் செல்லச் செய்யும் பாடல்களைப் பாடினதைக் கண்டோம். அவள் வெட்கப்படவில்லை. அவள் எங்கும் தன்னுடைய வெளிப்படுத்துதலை வெளிப்படுத்தினாள். ஒவ்வொரு அண்டை வீட்டாரும், ஒவ்வொரு சபையும், எல்லாவிடங்களிலும் அவள் இணைந்திருந்தாள், அவள் தன்னை வெளிப்படுத்தி, தேவனைக் குறித்து அவள் என்ன நினைத்திருந்தாள் என்பதை வெளிப்படுத்தினாள். அவளுடைய ஜீவியமே, அவளால் இருக்க முடிந்த எல்லாமே, அவள் தான் என்னவாயிருந்தாள் என்பதை கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக, ஒரு புதிதாய் பிறந்த சிருஷ்டியாக வெளிப்படுத்தினாள்.

53 ஒரு சில வாரங்களுக்கு முன்னர், அதே படிகளில் ஏறிய அந்த—அந்த அது என்னுடைய அருமையான வயோதிக தாயாருக்கு அவள் ஒரு அருமையான தோழியாய் இருந்தாள். இன்றைக்கு அவர்கள் ஒன்றாக இருக்கிறார்கள்.

54 வெளிப்படுத்துதல்களைக் காண்பது என்ன ஒரு அற்புதமான காரியமாய் உள்ளது, தேவன் எப்படி செய்கிறார்! அவளுடைய கடிதங்கள், சகோதரி பெல், ஒவ்வொரு முறையும் நான் வீட்டிற்கு வரும்போது, பில்லி, என் மகன், எனக்கு ஒரு கொத்தாகக்

கடிதங்களைக் கொண்டு வருவான். சகோதரி பெல் தொடர்ந்து தொலைபேசியில் அழைத்து, “*இவருக்காக* ஜெபியுங்கள். *அவருக்காக* ஜெபியுங்கள்” என்று கூறுவார். அது, என்ன செய்து கொண்டிருந்தது? என்னைப் பொறுத்தவரையில், அது அவளுடைய வெளிப்படுத்துதல், அவளுடைய உட்புறத்தில் என்ன இருந்தது என்பதை அவள் தெரியப்படுத்துதல்; அவளுடைய சக மனிதனுக்கான ஒரு பாரமாய், அவளுடைய பிள்ளைகளுக்கான ஒரு பாரமாய், சுற்றிலுமுள்ள ஒவ்வொருவருக்குமான, சுகவீனமான ஒவ்வொருவருக்குமான ஒரு பாரமாய் இருந்தது.

55 சகோதரி பெல் ஏறக்குறைய தேவனுடைய கிருபையினால் கடந்த சில வருடங்களாக ஜீவித்தாள். அவள் தேவனுடைய சுகமளிக்கும் வல்லமையில் ஒரு உண்மையுள்ள விசுவாசியாயிருந்தாள். மேலும், கடந்த இரவு அது நிகழ்ந்தது…என் வாழ்க்கையில் நான் அவளுக்காக ஜெபித்ததேயில்லை, தேவன் அவளைக் குணப்படுத்தும் வரை, அந்த அன்பான வயதான அந்த அருமையான வயோதிக பரிசுத்தவாட்டியுடன் ஜெபித்தோம்.

56 அன்றொரு இரவு, நான் அழைக்கப்பட்டபோது, நான் அரிசோனாவிலிருந்து ஏறக்குறைய நள்ளிரவில் தான் வந்தடைந்தேன். அவர்கள் என் மகனை அழைத்து, “சகோதரி பெல் அவர்களுடைய நண்பர் சகோதரி ஷெப்பர்ட், நீங்கள் அவருக்காக ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறாள். அவள் மருத்துவமனையில் இருக்கிறாள்” என்றாள். அது சகோதரி ஷெப்பர்ட் என்று நான் புரிந்து கொண்டேன்; அவள் அறிந்திருந்த ஷெப்பர்ட் என்னும் பெயர் கொண்ட ஒரு ஸ்திரீ ஒருக்கால் இப்பொழுது கட்டிடத்தில் இருந்திருக்கலாம். அவள் மருத்துவமனையில் இருக்கிறாள் என்றே நான் நினைத்தேன்.

57 அடுத்த நாள் காலை அவர்கள் பதினொரு மணியளவில் தொலைபேசியில் மீண்டும் அழைத்து, “அது சகோதரி ஷெப்பர்ட் அல்ல, அது சகோதரி பெல், அவள்தான் மருத்துவமனையில் இருக்கிறாள்” என்று கூறினர். தேவனுடைய ஞானமுள்ள ஏற்பாடும் திட்டமும், அவர் அங்குச் செல்வதற்கு முன்னரே, சகோதரி பெல் அவர்கள் தங்க நிற படிக்கட்டுகளில் ஏறிவிட்டிருந்தாள், நான் அங்குச் செல்வதற்கு முன்பே, ஆயிர வருட அரசாட்சிக்காகத் தம்முடைய பூங்கொத்தை உருவாக்க, தேவன் தம்முடைய வண்ண ரோஜாவைப் பறித்திருந்தார், நான் அங்குச் செல்வதற்கு முன்பே, அவள் தேவனை சந்திக்க சென்றுவிட்டாள். தேவனுடைய அன்பின் அவருடைய வெளிப்படுத்துதல்!

58 இத்தனை வருட மகிழ்ச்சியான திருமண வாழ்க்கை, தன் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் ஓர் இல்லத்தை அமைத்துக் கொடுப்பதில் ஒரு மனைவியாக அவள் காட்டிய விசுவாசத்தின் வெளிப்பாடாக இருந்தது. அது மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்த சிறுவர்கள் மற்றும் கடுமையான வாழ்க்கைச் சூழல் ஆகியவற்றின்

மத்தியில், கடினமான காலங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. மேலும், பசியுடன் இருக்கும் சின்னஞ்சிறு வாய்கள் மேசையைச் சுற்றி இருக்கும்போது, எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து, அவை நீடித்து—நீடித்து நிலைக்கச் செய்ய ஒரு தாய்க்கு, ஒரு தாய்க்குத் தெரியும். ஆனால், அவளுடைய கணவனோடு உண்மையாய் நிற்பது, அவளுடைய பிள்ளைகளோடு நிற்பது, அது அசலான உத்தமத்தின் வெளிப்பாடாய் இருந்தது. அது உங்கள் ஒவ்வொருவருக்கும் முன்பாக உள்ளது. நான் அதைக் கூற வேண்டியதில்லை. அது உண்மை என்பதை நீங்கள் அறிவீர்கள். பார்த்தீர்களா? ஆம், ஐயா.

59 அவளுடைய பிள்ளைகளுக்கான அவளுடைய தவறாத வேண்டுகோள்! அந்தப் பிள்ளைகளுக்காக அவள் ஒரு வேண்டுகோளையும் கேட்காமல், நான் அவளை எப்போதாவது சந்தித்ததாகவோ அல்லது அவளை விட்டுப் பிரிந்ததாகவோ நான் நினைக்கவில்லை. அது உண்மையான தாய்மையைக் காண்பித்தது, வாழ்க்கை வெறுமனே ஒரு சொப்பனம் அல்லது ஒரு ஆயத்த இடம் என்பதை அறிந்திருந்தாள், ஆனால் அவளுடைய பிள்ளைகள், அவள் இங்கே அப்பால் உள்ள ஒரு தேசத்தில் அவர்களைச் சந்திக்க விரும்பினாள், அங்கே இனி ஒருபோதும் கடினமான நேரங்கள் இருக்காது. அவள் தொடர்ந்து என்னிடத்தில் கூறுவாள்…அவள் என்னைச் சகோதரன் பில்லி என்று அழைத்தாள். அவள், "சகோதரன் பில்லி, என்னுடைய பிள்ளைகள் யாரும் இழக்கப்படாமல், அவர்களுக்காக ஜெபியுங்கள்" என்று கூறுவாள். அது உண்மையான தாய்மையை வெளிப்படுத்தவில்லையென்றால்; ஒரு தாய் தன்னுடைய பிள்ளைகளில் அக்கறையுள்ளவளாய், தன்னுடைய அண்டை வீட்டாரிடத்தில் அக்கறையுள்ளவளாய், அவளுடைய கணவனிடத்தில், அவளுடைய அன்பார்ந்த ஒருவரிடம் அக்கறை கொண்டிருக்கிறாளே! அது ஸ்திரீயில் தேவன் நித்திய காரியங்களை வெளிப்படுத்துகிறதாயுள்ளது.

60 என்னுடைய நல்ல நண்பரான அவருடைய கணவரோடு நான் எவ்வளவாய் அனுதாபப்படுகிறேன். ஜெர்மனியிலும், பல்வேறு இடங்களிலும் உள்ள ஒரு தாய் மரித்துப் போய்விட்டார் என்ற செய்தியைக் கேட்கும்போது, அந்தப் பையன்களோடு நான் எப்படியாய் அனுதாபப்படுகிறேன். ஆனால் பையன்களே, அவள் இங்கே உங்களுடைய சமூகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றிருக்கலாம், ஆனால் அவள்—அவள் மரிக்கவில்லை. அவள் என்றென்றைக்குமாய் உயிரோடிருக்கிறாள். அவள் ஒரு தேசத்தில் ஜீவிக்கிறாள், நீங்கள் ஒவ்வொருவரும் அவளைச் சந்திக்க வேண்டும் என்று அவள் ஜெபித்திருந்தாள். அவள் ஏமாற்றமடைய விட வேண்டாம். அவள் அவ்வாறு ஏமாற்றமடைய மாட்டாள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

61 இந்தப் பிற்பகல், அந்தச் சக்கரத்திலிருந்து ஒரு குறுக்குக் கம்பி

வெளியே வந்ததை நான் காண்கிறேன். அந்த முதல் குறுக்குக் கம்பி என்னுடைய குடும்பத்திலிருந்து எடுக்கப்பட்டதை நான் நினைவு கூருகிறேன். அவை ஒவ்வொன்றாகக் கீழே விழும். அது அதிக காலம் ஆகாது. கவனியுங்கள். அந்தச் சக்கரங்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து, உடைந்த சக்கரங்கள் இல்லாத வேறொரு தேசத்தில், அங்கே தேவனுடைய மகத்தான திட்டம் நிறைவேற்றப்பட்டு, காலங்களினூடாக உருண்டு செல்ல முடியும். குடும்பம், அது அந்தவிதமாகவே இருக்கட்டும். உங்களுக்கு எப்பொழுதுமே ஒரு தாய் உண்டு; இப்பொழுது என்றென்றைக்கும் அவளோடு இருப்பீர்களாக. அது உண்மை.

62 தேவனுடைய அன்பை வெளிப்படுத்தின மற்றொரு காரியம். எனக்குப் புரிந்த வரையில், அவளுடைய வேண்டுகோள் என்னவென்றால், தான் ஒருபோதும் வயதாகித் தவிக்கவோ, முதுமையில் அவதிப்பட்டு, உடல் நலிவடைந்து, நோயுற்று, மெல்ல மெல்ல மரணத்தை நோக்கிச் செல்லவோ கூடாது என்பதுதான். தேவன் அந்த வேண்டுகோளை அருளினார். அது உண்மை. ஏன், இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளுக்கு முன்பு, அவள் இங்கே ஒரு சபை இருக்கையில் நின்று, மகிமையான கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பாடிக்கொண்டிருந்தாள்.

63 இது என்ன? சுமார் அறுபத்தைந்து வயது முதிர்ச்சி அடையாத நிலையில் காணப்பட்ட ஒரு தாயின் இந்தக் குணாதிசயம் என்ன? அதன் பொருள் என்ன? அது, "அவருக்கு முன்பாக உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார் என்று தேவன் தம்மை வெளிப்படுத்துவதாகும்." தேவன், அவளுடைய மரணத்தில் வெளிப்படுத்துதல், அவர் தேவனாயிருக்கிறார் என்றும், அவருக்கு முன்பாக நேர்மையாக நடப்பவர்களுக்கு, அவர்களுடைய இருதயத்தில், அவர்களுடைய இருதயத்தின் வாஞ்சையை அவர் அருளுவார் என்று தேவன் நமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

64 இதைக் காணும்போது, அவர் தேவனாயிருக்கிறார், நாம் யாவரும் இந்த ஸ்தானத்திற்கு வர வேண்டும், அப்பொழுது நாம் அவருடைய வெளிப்படுத்துதல்களின் அடையாளங்களைப் பார்ப்போம். அவருடைய அன்பும், அவருடைய சபையும், அவருடைய ஜனங்களும், அதிலுள்ள ஒவ்வொரு காரியமும் நமக்குத் தேவனுடைய வெளிப்படுத்துதல்களாயிருக்கின்றன. அப்படியானால், கிறிஸ்துவின் மூலமாக மரணத்தையே வென்ற இந்த வாழ்விற்காக நாம் அனைவரும் தாழ்மையுடன் தலைவணங்கித் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

65 அதன்பின்னர் இயேசு யவீருவின் குமாரத்தியினிடத்திற்குச் சென்றபோது, "அவள் மரிக்கவில்லை, ஆனால் அவள் நித்திரையடைந்திருக்கிறாள்" என்று கூறின வார்த்தைகள். அவள் தன்னுடைய உறக்கத்திற்கே சென்றுவிட்டாள், அவளுடைய

மரணத்திற்கல்ல. ஏனென்றால் அவள் அநேக ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சிறு பெண்ணாயிருந்தபோது மரித்து, இப்பொழுது அவள் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கிறாள்; நமக்கு மாத்திரமே நித்திரை, ஆனால் கிறிஸ்துவோடு வாழ்கிறாள்.

66 ஆகையால் நாம் நம்முடைய தலைகளை வணங்கி, இந்தத் தீரமான ஜீவியத்திற்காக நன்றி செலுத்துவோமாக.

67 பரலோகப் பிதாவே, நிச்சயமாக நீர் எங்களுடைய இருதயங்களை அறிந்திருக்கிறீர், நிச்சயமாக நீர் எங்களுடைய சிந்தையில் உள்ள சிந்தனைகளை அறிந்திருக்கிறீர். எங்களைக் குறித்த எல்லாவற்றையும் நீர் அறிவீர். நாங்கள் உம்முடைய கரத்தின் சிருஷ்டியாயிருக்கிறோம். சகோதரி பெல் எங்களிடத்திலிருந்து எடுக்கப்பட்டதைக் கண்டு நாங்கள் வருந்துகிறோம் என்பதை நீர் அறிவீர். ஆனால், தேவனே, அவளுடைய வேண்டுகோள் அளிக்கப்பட்டதற்காகவும் அவளுக்கான உம்முடைய வாஞ்சை நிறைவேற்றப்பட்டிருக்கிறதாலும், நாங்கள் நன்றியுணர்வுடன் எங்கள் தலைகளையும் இதயங்களையும் தாழ்த்துகிறோம். அதாவது இங்கே பாதையின் முடிவிலும் கூட, அவள் உம்முடைய ஊழியக்காரி என்று அவள் தொடர்பு கொண்ட ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அவளுடைய மரணச் செய்தி எழுதப்பட்டிருக்கும். அவளை அறிந்த எல்லோருடைய இருதயங்களிலும் அவளுடைய தாக்கம் நீண்ட காலம் ஜீவிக்கட்டும். தேவனே, இத்தனை ஆண்டுகளாக அவள் நேசித்து, பேசி, பாடிவந்த அந்தத் தேசத்தில் அவளுடைய தீரமான ஆத்துமாவை இளைப்பாறச் செய்ய வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

68 கர்த்தாவே, இந்தப் பிற்பகல் நான் ஜிம்மிக்காக ஜெபிக்கிறேன். அவர் அங்கு அமர்ந்திருப்பதை நான் காணும்போது, அவருடைய கன்னத்தில் படிகக் கண்ணீர் வழிந்தோடும்போது, அவர் தன்னுடைய சிந்தனைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவர் ஒரு விசுவாசமுள்ள மனைவியைக் குறித்து நினைத்துக் கொண்டிருக்கிறார். தங்களுடைய கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடும் இந்தப் பிள்ளைகளைக் குறித்து, அவர்கள் ஒரு அருமையான தாயைக் குறித்து நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனே, நீர் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். அவர்களுடைய இருதயங்களைத் தேற்றும். வேறு எதனாலும் எட்ட முடியாத, மனித இருதயத்தைச் சென்றடையக்கூடிய அந்தக் கரத்தை நீட்டி, என்றாவது ஒருநாள் நாம் மீண்டும் சந்திப்போம், அங்கே இனி ஒருபோதும் எங்களுக்கு அங்கே மற்றொரு சவ அடக்க ஆராதனை ஒருபோதும் நடக்காது என்ற இந்த மாபெரும் திருப்தியை அவர்களுக்கு அளிப்பீராக.

69 அவளுடைய அன்பார்ந்தவர்களையும், அவளுடைய சகோதரர்களையும், அவளுடைய சகோதரிகளையும், அவளுடைய

பேரப்பிள்ளைகளையும், அவளுடைய அண்டை வீட்டாரையும் ஆசீர்வதியும்.

70 கர்த்தாவே, இந்தச் சபைகள் அவளிடத்தில் எப்படியாய் அன்பு கூர்ந்தனர் என்பதை நாங்கள் அறிவோம். அவள் எங்களுக்கு மத்தியில் நடந்து சென்றது போல, அவர்கள், அவள் அவர்கள் மத்தியில் நடந்து வந்திருக்கிறாள். கர்த்தாவே, நாங்கள்—நாங்கள் அவளை நேசித்தோம் என்ற இந்த மகத்தான பரஸ்பர உணர்வைப் பகிர்ந்து கொள்கிறோம். அவளுடைய ஜீவியத்திற்காக நாங்கள் இங்கே எங்களுடைய—எங்களுடைய—எங்களுடைய நன்றியை உமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

71 கர்த்தாவே, நாங்கள் பாதையின் முடிவிற்கு வரும்போது, நாங்கள் உம்மைச் சந்திக்க ஆயத்தமாயிருக்கும்படியாக, எங்களை உருவாக்கி, எங்களை வனையும். ஓ நித்திய தேவனே, எங்களுடைய அநேக பாவங்களை மன்னியும். கர்த்தாவே, எங்கள்மேல் இரக்கமாயிரும், ஏனென்றால் நாங்கள் பெலவீனமாயும், சோர்ந்துபோயிருக்கிறோம்.

72 இந்தப் பிற்பகல், நீர் எங்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். உமது வார்த்தையிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட இந்த வார்த்தைகளிலும், பல்வேறு ஊழியர்கள் மூலமாகவும், அத்தகையவற்றைக் கொண்டுவர நியமிக்கப்பட்டவர்கள் மூலமாகவும், அயலார் மற்றும் நண்பர்கள் மூலமாகவும் அதை நாங்கள் கண்டுகொள்வோமாக. அங்கே, மலர்கள், மரங்கள், சூரிய ஒளி, இலைகள் ஆகியவற்றின் சாட்சியுடனும், எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக விளங்கும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்துடனும் நாங்கள் கண்டடைவோமாக. “நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.” ஓ, கர்த்தாவே, நாங்கள் எவ்வளவாய் அவரை நேசிக்கிறோம்! இக்கட்டு நேரத்திலும் எங்களுக்கு இந்த ஆசீர்வதிக்கப்பட்ட உறுதியை அளிக்கும்படி நீர் அவரை எங்களுக்கு அனுப்பியதற்காக நாங்கள் எவ்வளவாய் பாராட்டுகிறோம்.

இப்பொழுது மேற்கொண்டு வரும் ஆராதனைக்காக எங்களுக்குப் பெலனைத் தாரும்.

73 கர்த்தாவே, இப்பொழுது இந்தச் சீருடையில் அமர்ந்துள்ள இந்தப் பையன்களுக்காக நான் ஒரு விசேஷித்ததை கேட்க விரும்புகிறேன். அந்தப் பையன்கள் ஆசீர்வதிக்கப்படுவார்களாக, ஏனென்றால் அவர்கள் தங்களுடைய அணிகளுக்குத் திரும்ப வேண்டும். ஆனால் கர்த்தாவே, அந்நாளில்…அவர்கள் இப்பொழுது அணியும் இந்தச்

சீருடைகளை நாங்கள் பாராட்டுகிறோம் என்று நான் ஜெபிக்கிறேன். ஆனால் தாயினுடைய ஜெபத்திற்கு பதிலளிக்கப்படும்படியாக: அவர்கள் அந்நாளில் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தத்தையும், நீதியையும் தரித்திருப்பார்களாக. கர்த்தாவே, பெண்பிள்ளைகளும், யாவரும் ஒன்று சேர்ந்து, அந்தவிதமாகத்தான் கிறிஸ்தவ போர்வீரர்களாக இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம், உண்மையான பலமான விசுவாசம். கர்த்தாவே, நாங்கள் மீண்டும் சந்திக்கும் அந்த நாள்வரைக்கும் எங்களை வழி நடத்தி, எங்களுக்கு வழிகாட்டும்.

74 இப்பொழுது அவளுடைய ஜீவியத்திற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம், நாங்கள் யாவரும் உம்முடைய பாதத்தில் சந்திக்கும் வரை நீர் எங்கள் எல்லோரோடும் இருக்க வேண்டும் என்று ஜெபிக்கிறோம். நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

62-0313 வெளிப்படுத்துதல்கள்
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Voice Of God Recordings, India Office
19 (New No: 28) Shenoy Road, Nungambakkam
Chennai 600 034, India
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

Voice Of God Recordings
P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.
www.branham.org